கவிதைப்பேழை

இயல் மூன்று

# கல்வியைப் போற்று




கல்விக்கு எல்லை இல்லை. மனிதர்கள் பிறந்தது முதல் இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்கிறார்கள். கல்வி மனிதர்களை உயர்த்துகிறது. அஃது ஒரு செல்வமாகக் கருதத் தக்கது. அத்தகைய கல்வி மனிதர்களுக்கு எவற்றையெல்லாம் தரும் என்பதை விளக்கும் பாடலைக் கற்போம், வாருங்கள்!

*அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*
*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*
*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*
*பொருத்துவதும் கல்வியென்றே போற்று.**

*– கா.ப.செய்குதம்பிப் பாவலர்*



## சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெருக்கி | – | வளர்த்து | திருத்தி | – | சீராக்கி |
| மருளை | – | மயக்கத்தை | மதி | – | அறிவு |
| தெருளை | – | தெளிவை | ஆவி | – | உயிர் |
| அருத்துவதும் | – | தருவதும் | பொருத்துவதும் | – | சேர்ப்பதும் |

## பாடலின் பொருள்

அருளினை வளர்த்து, அறிவைச் சீராக்கி, மயக்கத்தினை அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

## நூல் வெளி



கா.ப.செய்குதம்பிப் பாவலர் கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்; அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி, 'சதாவதானி' என்னும் பட்டம் பெற்றவர். இவர் நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருமதினத்து அந்தாதி உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

நீதி வெண்பா என்னும் நூலில் இருந்து ஒரு பாடல் நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.



6th Std-Tamil_2025_Term_I_Unit_3.indd 42 22/01/2025 14:31:24